Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 20 2025

வெள்ளிக்கிழமை ஜூன் 20, 2025 | ஒளி: 10 கதிர் 265 | பக்கம்:10 | நகரப்பதிப்பு★ | FREE

## “தங்கத்தை தாருங்கள்”



யுத்த காலத்தில் தமிழீழ வைப்பகத்தில் இருந்து மீட்கப்பட்ட தங்க நகைகளை, அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய முறையான பொறிமுறைகளை தயாரித்து உரியவர்களிடம் ஒப்படைக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “மனித புதைகுழிகளுக்கு விஜயம் செய்யுங்கள்”

## வோல்க்கெர் டேர்க்கிரிடம் வலியுறுத்தல்



புதைகுழிகள் காணப்படும் பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க் விஜயம் மேற்கொள்ளவேண்டும், என மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடரும் காணி அபகரிப்புகள் குறித்து கரிசனையை வெளியிடவேண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பயன்பாட்டினை உடனடியாக நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருக்கு இலங்கையின் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் 12 பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க் இம்மாதம் 23 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

2024 தேர்தல்களின் மூலம் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் உயர் ஸ்தானிகர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கையில் நடந்து வரும் ஆட்சி மாற்ற பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகள் கடந்த கால வன்முறைகளின் சுழற்சி மூன்று தசாப்தகால மோதல்களின் நீடித்த விளைவுகள் ஆகியவற்றுடன் நாடு போராடிக்கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் இந்த விஜயம் இடம்பெறுகின்றது.

2024 அரசாங்க மாற்றம் சீர்திருத்தத்தை உறுதியளித்தது புதிய கலாச்சாரம் ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை மீண்டும் தூண்டியது. ஆயினும்கூட ஏழு மாதங்களுக்கு பிறகும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் மற்றும் முக்கிய நிர்வாகம் மற்றும் சட்ட சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சமூகத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியினர் கடுமையான சமூக-பொருளாதார சவால்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய சூழலுக்கு மத்தியில் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சமீபத்திய பயன்பாடு சந்தேக நபர்களின் உரிய செயல்முறையை மீறியுள்ளது.

நிலம் கையகப்படுத்துதல் போன்ற நீண்ட கால பிரச்சினைகள் சமூகங்களுக்கு அவர்களின் நிலங்களை அணுகுவதற்கான உரிமை, சொந்தமாக்குதல் மற்றும் பயன்படுத்துவதற்கான உரிமை நடமாடும் சுதந்திரம் மற்றும் உயிர் வாழும் வழிமுறைகளள் தொடர்ந்து மறுத்து வருகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

## ”தனியார் காணியை சுவீகரிக்க முயற்சி”



மன்னார் பள்ளிமுனை கடற்கரை வீதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள தனியாருக்கு சொந்தமான காணிகளை மீட்டெடுக்க காணியினுடைய உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்கு தொடுத்திருக்கின்ற நிலையில் அரசாங்கம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் இந்தக் காணிகளை அரச சொத்தாக மாற்றியமைக்க முயற்சிப்பதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட எம்.பி செல்வம் அடைக்கலநாதன் குற்றம்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## “ராஜபக்ஷக்களின் ஆட்சியிலும் பொதுமன்னிப்பு முறைக்கேடு”



ராஜபக்ஷக்களின் ஆட்சியில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு ஊடாக சட்டவிரோதமான முறையில் சிறைச்சாலை திணைக்களத்தால் பல கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த முறைகேடு தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கெஹெலியவின் மேலும் இருமகள்கள், மருமகனுக்கு பிணை

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் வியாழக்கிழமை (19) கைது செய்யப்பட்ட, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மேலும் இரண்டு மகள்களான சமித்ரி ஜெயனிகா ரம்புக்வெல்ல மற்றும் அமலி நயனிகா ரம்புக்வெல்ல ஆகியோரும் அமலியின் கணவரும் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் நிபந்தனை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## மஹிந்த, மைத்திரி, ரணில், பசில்: கால்நடை ஊழலில் சிக்குவர்

110 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கால்நடை இறக்குமதி ஊழலில் பலரும் ஈடுபட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) தெரிவித்தார்.

இந்த குற்றச்சாட்டில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, ஹரிசன், விஜித் விஜிதமுனி டி சொய்சா, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் லக்ஷ்மன் வசந்த பெரேரா ஆகியோர் தப்பிக்கமுடியாது என்றார்.

தொடர்ச்சி P2

## துமிந்தவின் விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவின் விளக்கமறியல் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தால் வியாழக்கிழமை (19) அன்று எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

. ‘ஹெவ்லொக் சிட்டி’ அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ள பாதுகாப்பு காவலர் ஒருவர், T56 துப்பாக்கியுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார். மற்றொரு பெண்ணும் துமிந்த திசாநாயக்கவின் சமையல்காரரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## “உணவு இழப்பை கையாளுதல் வேண்டும்“




“கழிவுகளுக்கு அப்பால்: தெற்காசியாவில் சிறந்த ஊட்டச்சத்துக்காக உணவு, நீர் மற்றும் ஆற்றலை மேம்படுத்துதல்" என்ற உயர்மட்ட கொள்கை உரையாடலில் பிரதமர் பங்கேற்றார்.

கொழும்பில் உள்ள ஐரிசி ரத்னதீப ஹோட்டலில் புதன்கிழமை (18) நடைபெற்ற “கழிவுகளுக்கு அப்பால்: தெற்காசியாவில் சிறந்த ஊட்டச்சத்துக்காக உணவு, நீர் மற்றும் ஆற்றலை மேம்படுத்துதல்" என்ற தலைப்பிலான உயர்மட்ட கொள்கை உரையாடலில் பிரதமர் பங்கேற்றார்.

தொடர்ச்சி P2

## இந்திய நடிகர் மோகன்லால் சபாநாயகர் கலரிக்கு வந்தார்



இலங்கைக்கு படப்பிடிப்பொன்றிற்காக வருகை தந்துள்ள இந்திய நடிகர் மோகன்லால் பாராளுமன்றத்திற்கு வியாழக்கிழமை (19) வருகை தந்தார். அவர், சபாநாயகரின் கலரியில் இருந்து சபை நடவடிக்கைகளை சிறிதுநேரம் அவதானித்தார்.

தொடர்ச்சி P2

## மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்



■ எஸ்.ஆர்.லெம்பேட்

மீன்பிடி தடைக்காலம் நிறைவடைந்த நிலையில் மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் மீது நடுக்கடலில் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி விரட்டி அடித்ததாக கரை திரும்பிய மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளதுடன் எதிர்பார்த்த மீன் பிடி இல்லை என வேதனை தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## புத்தர் சிலை விவகாரம்: இளைஞனுக்கு பிணை

■ அ . அச்சுதன்



திருகோணமலை- மூதூர் 3ம்கட்டைமலைபுத்தர் சிலை விவகாரத்தால் விகாராதிபதியின் முறைப்பாட்டில் கைதான இளைஞனுக்கு புதன்கிழமை (18) அன்று பிணை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## “புற்றுநோய் போன்ற நாடு இஸ்ரேல்”

### ஈரானுக்கு வட கொரியா ஆதரவுக் குரல்



ஈரான் மீதான இஸ்ரேலின் சமீபத்திய வான்வழித் தாக்குதலை “கொடூரமான ஆக்கிரமிப்புச் செயல்” என்று வட கொரியா கண்டித்துள்ளது. இது மேற்கு ஆசியாவில் மிகப் பெரிய போரை ஏற்படுத்தும் அபாயம் இருப்பதாகவும் வடகொரியா எச்சரித்துள்ளது. இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான தீவிரமான போர் வியாழக்கிழமை (19) ஏழாவது நாளை எட்டியது. இந்த நிலையில், வடகொரிய அரசு நடத்தும் செய்தி நிறுவனமான கேசிஎன்ஏ (KCNA) வெளியிட்ட அறிக்கையை மேற்கோள் காட்டியுள்ள யோன்ஹாப் நாளிதழின் செய்தியில்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "தனியார் காணியை சுவீகரிக்க முயற்சி"

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

போதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில், பள்ளிமுனை கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் கடற்றொழிலினையே தமது வாழ்வாதாரமாக கொண்டு கடலினை அண்டி வாழந்து வருபவர்கள்.இது கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற கிராமம். இந்த கடலினை அண்டியதாக 24 குடும்பங்கள் 10 பேர்ச் காணித்துன்டில் அரசாங்கத்தினால் வீடு கட்டி கொடுக்கப்பட்ட வீடுகளில் 1984ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் வரை வாழ்ந்து வந்தன .

இது தனிநபருக்கு சொந்தமான காணி. ஆனால் 1984 ம் ஆண்டு இக்காணி துண்டுகளை வீடமைப்புத்தினைக்களம் வேண்டி வீடுகளை அமைத்து குடியேற்றதிட்டம் ஒன்றை நிறுவி மீளவும் அங்கு குடியேறியவர்களுக்கு விற்றுஅதற்குரிய பணத்தையும் பெற்றுக்கொண்டதும்இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. இது தனிநபருக்குசொந்தமானகாணிகள்(மொத்தம் 2ஏக்கர் 02 பேர்ச் ) இதற்குரியஉறுதிப்பத்திரங்களும் இவர்களுடைய கைகளில் இருக்கின்றன.

மக்கள், 1990ல் இடம்பெயர்ந்த பின்பு இது ராணுவம், பொலிஸ்,தற்பொழுது கடற்படையினரின் முகாமாக இருப்பிடமாக மாறியிருக்கிறது. இந்த நிலையில் காணியினுடைய உரிமையாளர்கள் இவற்றை மீட்டெடுப்பதற்காக நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்தார்கள். ஆனால் அரசாங்கம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் இந்த காணிகளை அரச சொத்தாக மாற்றியமைக்க முயற்சிக்கிறது.



# "ராஜபக்ஷக்களின் ஆட்சியிலும் பொதுமன்னிப்பு முறைக்கேடு"

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) நடைபெற்ற விவாதத்தில் நாமல் ராஜபக்ஷ உரையாற்றிய போது குறுக்கிட்டு பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்

நாமல் ராஜபக்ஷ, உரையாற்றுகையில்,அரச அதிகாரிகளை குழுவுக்கு அழைத்து அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து அவர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் நிலைமையே காணப்படுகிறநது. ஆனால் குழுவின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரம் முறைகேடாக பயன்படுத்தப்பட்ட விவகாரத்தில் சிறைச்சாலை அதிகாரி உட்பட சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் நீதியமைச்சின் செயலாளரிடம் இதுவரையில் வாக்குமூலம் பெறவில்லை. அரசாங்கத்தின் நிர்வாக கட்டமைப்பின் பலவீனத்தினால் தான் இந்த முறைகேடு இடம்பெற்றுள்ளது என்றார்.

இதன்போது குறுக்கிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, ராஜபக்ஷக்களின் ஆட்சியில் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் ஊடாக பல கைதிகள் சட்டவிரோதமான முறையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் .குற்றப்புலனாய்வு திணைக்களம் முறையான விசாரணைகளை மேற்கொள்கிறது. வெகுவிரைவில் உண்மையை பகிரங்கப்படுத்துவோம் என்றார்.



# கெஹெலியவின் மேலும் இருமகள்கள்,

ரூ. 134 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள அறிவிக்கப்படாத சொத்துக்கள் தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.இதில் ரூ. 40 மில்லியன் மதிப்புள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், ரூ. 20.5 மில்லியன் மதிப்புள்ள பென்ஸ் கார் மற்றும் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கிட்டத்தட்ட 40 நிலையான வைப்பு கணக்குகள் மற்றும் ஆயுள் காப்பீட்டு முதலீட்டுத் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

மூன்று சந்தேக நபர்களும் கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க முன்னிலையில் வியாழக்கிழமை (19) மாலை ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், சந்தேக நபர்களுக்கு தலா 50,000 ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மூன்று சரீரப் பிணைகளை வழங்கிய தலைமை நீதவான், சந்தேக நபர்களின் வெளிநாட்டுப் பயணங்களைத் தடை செய்யவும் உத்தரவிட்டார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, முன்னாள் அமைச்சர் ரம்புக்வெல்ல, அவரது மனைவி மற்றும் மற்றொரு மகளையும் செவ்வாய்க்கிழமை (17) கைது செய்தது. அவர்கள் புதன்கிழமை (18) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யத் தவறியதால், விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.



# மஹிந்த, மைத்திரி, ரணில், பசில்: கால்நடை ஊழலில் சிக்குவர்

இந்த முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அமைச்சர்கள் யாரும் தப்பிக்க மாட்டார்கள் என்று அவர் கூறினார். "அவர்களில் யாருக்கும் எந்த கருணையும் காட்டப்படாது" என்று அவர் கூறினார்.

பால் கறப்பதற்காக பசுக்களை இறக்குமதி செய்வது என்ற போர்வையில் வயதான பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்



தமிழக அரசால் ஆண்டுதோறும் அமுல் படுத்தப்படும் மீன்பிடி தடைக்காலம் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி தொடங்கி ஜூன் மாதம் 14ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

மீன்பிடி தடைக்காலம் நிறைவடைந்த நிலையில் ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை அன்று மீன்பிடிக்க கடலுக்கு செல்ல தயாரான நிலையில் வங்க கடலில் வீசிய சூறைக்காற்று காரணமாக அரசங்கத்தால் மீனவர்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி அனுமதிச்சீட்டு ரத்து செய்யப்பட்டது

இதையடுத்து மீன்பிடி தடைக்காலம் முடிந்து 64 நாட்கள் பின் புதன்கிழமை (18) அன்று ராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

மீனவர்கள் கச்சத் தீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன் பிடித்து கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மீனவர்களை விரட்டி அடித்ததாகவும், ஒரு சில படகில் இருந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் சொல்லப்படுகிறது. இதனால் பெருத்த நஷ்டத்துடன் கரை திரும்பியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தடை காலம் முடிந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இறால், நண்டு கணவாய் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் அதிகளவு கிடைக்கும். ஆனால் மீன்பிடி தடைக் காலத்தின் போது இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டதால் தடை காலம் முடிந்து மீன் பிடிக்க சென்ற விசைப்படகு மீனவர்கள் எதிர்பார்த்த மீன்பாடு இல்லை இதனால் படகு ஒன்றுக்கு சுமார் 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளனர்.

இதே வேளை மீன்பிடி தடைக்காலம் நிறைவடைந்த நிலையில்,இலங்கை கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்ததோடு,கடற் படையினரின் உதவியுடன் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# "உணவு இழப்பை கையாளுதல் வேண்டும்"



இந்த கொள்கை உரையாடல் உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தால் பிரதமர் அலுவலகம் மற்றும் விவசாய, காணி மற்றும் வாழ்வாதார அமைச்சு மூலம் கேட்ஸ் மன்றம் மற்றும் பிற அபிவிருத்தி பங்காளிகளின் ஆதரவுடன் இணைந்து நடத்தப்பட்டது.

இந்த இரண்டு நாள் கொள்கை உரையாடல் உணவு அமைப்பை வலுப்படுத்துவதற்கும் சுழல் பொருளாதார தீர்வுகளை ஊக்குவிப்பதற்கும், காலநிலை-சான்ற விவசாயத்தை ஏற்றுக்கொள்வதற்கும், உணவு இழப்பு மற்றும் கழிவுகளை குறைப்பதற்கும் நடைமுறை வழிகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முக்கிய உரையை வழங்கிய பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய உணவு இழப்பு மற்றும் உணவு பாதுகாப்பின்மையை நிவர்த்தி செய்வதன் சரியான நேரத்தின் தேவையை வலியுறுத்தினார். பிரதமர் மேலும் தொழில்நுட்ப தீர்வுகள், விவாசாய வர்த்தக செயலமர்வுகள் மற்றும் உணவு அமைப்பில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பின் ஆதரவுடன் தேசிய மட்டத்தில் உணவு பாதுகாப்பை நிவர்த்தி செய்வதில் தேவையான ஒருங்கிணைப்பு, புத்தாக்கம் மற்றும் உள்ளடக்கல் என்ற மூன்று முக்கிய காரணிகளை எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர் தம்மிக பட்டபெந்தி, நேபாளம், மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உலக வங்கிப் பிரிவு பணிப்பாளர் டேவிட் சிஸ்லென், கேட்ஸ் மன்ற பணிப்பாளர் அர்ச்சனா வியாஸ் மற்றும் பிம்ஸ்டெக்கின் பொதுச் செயலாளர், தூதர் இந்திர மணி பாண்டே ஆகியோருடன் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்த உரையாடல் பிராந்தியம் முழுவதும் உணவு விரயத்தைக் குறைத்தல், ஊட்டச்சத்தை அதிகரித்தல் மற்றும் பேண்தகு வளப் பயன்பாட்டை மேம்படுத்தல் ஆகியவற்றின் செயற்பாட்டைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# இந்திய நடிகர் மோகன்லால் சபாநாயகர் கலரிக்கு வந்தார்

இதன்போது சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி அவரை வரவேற்றதுடன் நடிகர் மோகன்லாலின் வருகையை சபை உறுப்பினர்களுக்கும் அறிவித்தார். இதனையடுத்து சபையிலிருந்த அமைச்சர்கள், எம். பி.க்கள் மேசைகளில் தட்டி மோகன்லாலை வரவேற்றனர்



இதன்போது நடிகர் மோகன்லால் எழுந்து நின்று கரம் கூப்பி வணக்கம் செலுத்தினார். சிறிது நேரம் அமர்ந்திருந்து சபை நடவடிக்கைகளை பார்வையிட அவர் பின்னர் வெளியேறிச் சென்றார்.

# புத்தர் சிலை விவகாரம்: இளைஞனுக்கு பிணை

மூதூர் 3ம் கட்டை மலை விகாராதிபதி, அ.ரமேஷ் என்பவருக்கு எதிராக மூதூர் பொலிஸில் செய்த முறைப்பாடு தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டு புதன்கிழமை (18) மூதூர் நீதான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்..

ரமேஷ் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி துஷ்யந்தன் மற்றும் சட்டத்தரணி முகுந்தன் ஆகியோர் ஆஜராகி வாதாடினர். குறித்த காணிக்கு அரசினால் வழங்கப்பட்ட காணி உறுதி இருக்கிறது என சட்டத்தரணி துஷ்யந்தன், நீதிமன்றுக்கு அறிவித்தார். 2015 காலப்பகுதியில் ஆயுதப்படையினர் பலாத்காரமாகமுகாம் அமைத்து அதில் சிறிய புத்தர் சிலையை வைத்து வழிபட்டனர். பின் அவர்கள் அங்கிருந்து 2020ல் வெளியேறும் போது பிறகு வந்து அச்சிலையை எடுத்து செல்வதாக கூறி சென்றனர் .

ஆனால், இன்று வரை அது எடுக்கப்படாததால் அந்த இடத்தில் ரமேஷ், புத்தர் சிலையுடன் பிள்ளையார் சிலை வைத்து கடந்த 4 வருடம் வழிபாடு செய்தார் . கடந்த பொசன் போயா தினத்தன்று விகாராதிபதி வந்து பிள்ளையார் சிலையை அகற்ற முயன்றார்.

ரமேஷ் எதிர்த்ததால் அவரை கைது செய்யுமாறு பொலிஸில் விகாராதிபதி முறைப்பாடு செய்தார். இது மத சுதந்திரத்தை மீறும் செயல். இன முறுகலை ஏற்படுத்திய செயல். எனவே, அவரை விடுவிக்க வேண்டும் என கோரினார்.

# "தங்கத்தை தாருங்கள்"



அம்பாறை மாவட்டத்திலுள்ள வட்டமடு கால்நடை மேய்ச்சல் தரை பிரதேசம் மற்றும் மட்டக்களப்பு மாதவனை மேய்ச்சல் தரை பகுதியும் இன்னும் பண்ணையாளர்களுக்கு விடுவிக்கப்படவில்லை. அதனால் பண்ணையாளர்கள் மிகவும் கஸ்டப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. இதேவேளை 2009 இறுதி யுத்ததத்திற்கு முன்னர் தமிழீழ வைப்பகத்தில் வைக்கப்பட்ட அடகு நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க பொறிமுறையை அமைத்து கூடிய விரைவில் அந்த நகையை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# "புற்றுநோய் போன்ற நாடு இஸ்ரேல்"

அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் ஆதரவுடன் செயல்படும் இஸ்ரேல், மேற்கு ஆசியாவில் அமைதியை சீர்குலைக்கும் 'புற்றுநோய் போன்ற நாடு' என்று தெரிவித்துள்ளது.

மேலும், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளால் ஆதரிக்கப்படும் இஸ்ரேல், மத்திய கிழக்கில் அமைதியை சீர்குலைக்கும் புற்றுநோய் போன்ற அமைப்பாகவும், உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பை அழிப்பதில் முக்கிய குற்றவாளியாகவும் இருப்பதை தெளிவாக நிரூபிக்கிறது என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறினார்' என்று தெரிவித்துள்ளது.

1973-ல் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திய வட கொரியாவும் ஈரானும் தங்கள் ஆயுதத் திட்டங்களுக்காக நெருங்கிய உறவுகளைக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது என்றும், வடகொரியா மற்றும் ஈரான் ஆகியவை உக்ரைனுக்கு எதிரான அதன் போரை ஆதரிக்க ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கியுள்ளன என்றும் யோன்ஹாப் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், ஈரானுடனான தனது பொறுமை ஏற்கெனவே முடிந்து விட்டது என்று கூறிய நிலையில், வட கொரியா இத்தகைய கண்டனத்தை தெரிவித்துள்ளது.

முன்னதாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு புதன்கிழமை ஒரு தொலைக்காட்சி அறிக்கையில், இஸ்ரேலின் வான்வெளியைப் பாதுகாப்பதில் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். ஈரானை மிகப் பெரிய சக்தியுடன் இஸ்ரேல் தாக்கி வருவதாகவும், அதே நேரத்தில் போரில் இஸ்ரேல் வேதனையான இழப்புகளை சந்தித்ததை ஒப்புக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் புதன்கிழமை (18) செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஈரானிய அணுசக்தி நிலையத்தின் மீது வான்வழித் தாக்குதலை நடத்தலாமா வேண்டாமா என்பது குறித்து நான் இன்னும் முடிவு செய்யவில்லை. நான் அதைச் செய்யலாம், நான் அதைச் செய்யாமலும் இருக்கலாம். நான் என்ன செய்யப் போகிறேன் என்று யாருக்கும் தெரியாது. எதுவும் தாமதமாகவில்லை, ஈரானுக்கு நிறைய பிரச்சினைகள் உள்ளன. அது முடியும் வரை எதுவும் முடிவடையாது" என்றார்.







# ஜீவகாருண்ய சேவை...

கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை வெள்ளிக்கிழமை (20) அன்று காலை திறக்கப்படும் நிலையில் காட்டுப் பாதையில் பயணிக்கும் பாதயாத்திரிகர்களுக்கு குடிநீர் வழங்க தொண்டு நிறுவனங்கள் விரைந்து கொண்டிருக்கின்றன.

2025ம் ஆண்டிற்கான புனித கதிர்காமப் பாதயாத்திரை குடிநீர் சேவைக்காக சிவ தொண்டன் அமைப்பு, சேவற்கொடியோன் அமைப்பு, வலம்புரி யோன் அமைப்பு என்று பல தொண்டு நிறுவனங்கள் நீர்த்தாங்கி கொண்ட உழவு இயந்திரங்கள் சகிதம் உகந்தமலையை புதன்கிழமை (18) சென்றடைந்தன. காட்டுப் பாதையில் அவர்களது குடிநீர் வழங்கும் உன்னத ஜீவகாருண்ய சேவை ஆரம்பமாகிறது.

வி.ரி. சகாதேவராஜா











2024 ஆம் ஆண்டு யானை – மனித மோதல்களினால்

# “388 யானைகள் பலி; 155 மனிதர்கள் மரணம்”

2024 ஆம் ஆண்டு யானை - மனித மோதல்களினால் 388 யானைகள் பலியாகியுள்ள. 155 மனிதர்கள் உயிரிழந்துள்ளனர்.மனித உயிரிழப்புகளுக்காக 139.5 மில்லியன் ரூபாவும், சொத்து இழப்புகளுக்காக 219.13 மில்லியன் ரூபாவும் நஷ்டஈடாக செலுத்தப்பட்டுள்ளதென சுற்றாடல்துறை பிரதி அமைச்சர் அன்டன் ஜயக் கொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) இடம் பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் தேசிய மக்கள் சக்தியின் எம். பி. சுனில் ரத்னசிறி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,



இலங்கையில் 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கு அமைவாக 5879 காட்டு யானைகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு குருவிகளை கணக்கிட்டு செந்தரவு புத்தகம் வெளியிடப்பட்டது.

அதேபோல் 2020 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தாவரங்கள் மற்றும் உயிரினங்களை உள்ளடக்கிய வகையில் செந்தரவு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட செந்தரவு புத்தகத்தின் தரவுகளில் இலங்கையில் காட்டு யானைகள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு யானை - மனித மோதல்களினால் 388 யானைகளும் , 155 மனிதர்களும் உயிரிழந்துள்ளார்கள். மனித உயிரிழப்புகளுக்காக கடந்த ஆண்டு மாத்திரம் 139.5 மில்லியன் ரூபாவும், சொத்து இழப்புகளுக்காக 219.13 மில்லியன் ரூபாவும் நஷ்டஈடாக செலுத்தப்பட்டுள்ளது.

வருடாந்தம் செந்தரவு புத்தகத்தை வெளியிடுவதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. யானை- மனித மோதல்களை தடுப்பதற்கு தொழில்நுட்ப ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காட்டு விலங்குகளின் வாழிடங்களை பாதுகாப்பதற்கும், அவைகளின் உணவு தேவைகளை நிறைவேற்றுவதற்கும் விசேட திட்டங்கள் வனவளத்துறை திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணியொன்று வியாழக்கிழமை (19) இடம்பெற்றது.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயம் ஆகியவை இணைந்து இந்த விழிப்புணர்வு பேரணியை ஏற்பாடு செய்தனர்.

இவ் விழிப்புணர்வு பேரணியில் சுகாதார வைத்திய அதிகாரி எஸ். ரீ.எம்.நஜீப்கான், சாதுலியா வித்தியாலய அதிபர் எம்.எல். நிஜாம்தீன், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். எம்.நௌபர், பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் யூ.எல்.எம்.ஜின்னா, கிராம உத்தியோகத்தர் ஏ.எல். ஜௌபர், அறபா நகர் முகைதீன் அப்துல் காதர் வித்தியாலய அதிபர் ஏ.யூ. எம்.நளீம் ஸலாமி, சாதுலியா வித்தியாலய மாணவர்கள், பிரதேச பள்ளிவாசல்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், சமூக மட்ட அமைப்பின் உறுப்பினர்கள், பிரதேச நலன் விரும்பிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதில், போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான சுலோகங்கள் ஏந்தியவாறு மாணவர்கள் விழிப்புணர்வு பேரணியில் ஈடுபட்டனர்.





# குளவி கொட்டியதில் 12 தொழிலாளர்கள் படுகாயம்

ரஞ்சித் ராஜபக்ஷ



கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் குழு ஒன்று குளவிகளால் தாக்கப்பட்டதாகவும், 09 பெண்கள் மற்றும் 03 ஆண்கள் உட்பட 12 பேர் பொகவந்தலாவை மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மருத்துவமனையின் மாவட்ட மருத்துவ அதிகாரி இ.எஸ்.கே. ஜெயசூரியா தெரிவித்தார்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கு கீழுள்ள பொகவந்தலாவை தோட்டத்தில், வியாழக்கிழமை (19) தேயிலை செடிகளுக்கு இடையில் கட்டப்பட்டிருந்த குளவி கூடு மீது, தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த ஒரு பெண் தோட்டத் தொழிலாளியின் கால் மோதியதை அடுத்து, குளவிகள் கலைந்து கொட்டியுள்ளன.

நிலவும் மோசமான வானிலை காரணமாக, தேயிலைத் தோட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான குளவிகள் கூடுகட்டி உள்ளன, தோட்டத் தொழிலாளர்கள் மீது அதிக எண்ணிக்கையிலான குளவிகள் கொட்டியுள்ளமையால், தேயிலை கொழுந்து பறிப்பதை நிர்வாகம், வியாழக்கிழமை (19) நிறுத்தியுள்ளது.

# சிகரெட்டுகளுடன் அறுவர் கைது

டி.கே.ஜி. கபில

கட்டுநாயக்க விமான நிலையத்தின் “கிரீன் சேனல்” வழியாக 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய சிகரெட்டுகளை கொண்டு வந்த அறுவர் விமான நிலைய சுங்க அதிகாரிகள் மற்றும் சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் புதன்கிழமை (19) அன்று கைது செய்யப்பட்டனர்.

நான்கு ஆண் பயணிகள் மற்றும் இரு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பெண்களில் ஒருவர் வெளிநாட்டு பயணி என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஆறு பேரும் துபாய், ஷார்ஜா மற்றும் பாங்காக்கில் இருந்து வந்தவர்கள் என தெரியவந்துள்ளதுடன் அவர்களின் பயணப் பையிக்குள் இருந்து 84,000 வெளிநாட்டு “மான்செஸ்டர்” சிகரெட்டுகள் அடங்கிய 420 அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# உலர்ந்த இஞ்சி சிக்கியது: இருவர் தப்பியோட்டம்

கற்பிட்டி காவல் படைப் பிரிவு பகுதியில் உள்ள எரம்புகொடெல்ல கடற்கரையில், சுங்கச் சட்டங்களை மீறி இந்தியாவில் இருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 19 மூட்டை உலர்ந்த இஞ்சியை ஏற்றிச் சென்ற டிங்கி படகு, கற்பிட்டி பொலிஸாரால் வியாழக்கிழமை (19) காலை பறிமுதல் செய்யப்பட்டது. அப்போது படகில் இருந்த இரண்டு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பையில் 570 கிலோகிராம் இஞ்சி இருந்தது. அதன் மொத்த மதிப்பு ரூ. 3 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என்று பொலிஸார் கூறுகின்றனர். இராணுவ புலனாய்வுப் பிரிவுகளின் தகவல்களின்படி, கற்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரியான தலைமை ஆய்வாளர் லக்ஷ்மன் ரன்வாலா ஆராச்சி தலைமையிலான ஆய்வாளர் மில் ராய் உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்த சோதனையை நடத்தியது. தப்பி ஓடிய சந்தேக நபர்களைக் கண்டுபிடிக்க விசாரணைகள் நடந்து வருகின்றன.



# கற்பிட்டி தலைவர் கடமையை பொறுப்பேற்றார்





ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி பிரதேச சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.எஸ்.எம். ரிகாஸ் மற்றும் உபதலைவர் எச்.எம். சமன் குமார ஆகியோர் தமது கடமைகளை வியாழக்கிழமை (19) அன்று உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை (16) மாலை இடம்பெற்ற புதிய தலைவர் மற்றும் உப தலைவர் ஆகியோரை தேர்வு செய்யும் கூட்ட அமர்வில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரான ஏ.எஸ்.எம்.ரிகாஸ், 16 உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்று, கற்பிட்டி பிரதேச சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேலும், கற்பிட்டி பிரதேச சபையின் பிரதி தலைவர் தேர்வில் 17 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று எச்.எம். சமன் குமார, பிரதேச சபையின் உப தலைவராக தெரிவானார்.

இந்த நிலையில், கற்பிட்டி பிரதேச சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.எஸ். எம்.ரிகாஸ் மற்றும் பிரதித் தலைவர் எச்.எம்.சமன் குமார ஆகியோர் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க முன்னிலையில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஹம்மது பைசல் உட்பட தலைவர் தெரிவுக்கு ஆதரவு வழங்கிய கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# மூதூரில் ஆர்ப்பாட்டம்

மூதூர் கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர், பௌதீக வள பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர் பாடசாலைக்கு முன்னால் வியாழக்கிழமை (19) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முக்கிய பாடங்களைக் கற்பிப்பதற்கான கணித, வர்த்தகம், சிங்களம்,சமயம், I.C.T, ஆசிரியர் இன்மை, பௌதீக வளங்கள் இன்மை, போன்ற பிரச்சினைகளை சீர் செய்து தருமாறு கோரியே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.


## தேவை

ராஜகிரிய பகுதியில் உள்ள நிறுவனம் ஒன்றின் விற்பனை உதவியாளர் பதவிக்கு வயது 18 - 35 இடைப்பட்ட ஊழியர்கள் தேவை. இலகு வாகன உரிமங்கள் வைத்திருத்தல் கூடுதல் தகுதியாகும் சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம் .

தொடர்புகொள்ள ; 0719701067 (வாட்ஸ் ஆப்) , Shammi969@gmail.com

# பாதாள சொத்துக்களை முடக்குவதை துரிதப்படுத்தவும்

சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் சொத்துக்களை குவித்த 88 நபர்களின் சொத்துக்கள், பாதாள உலக உறுப்பினர்கள் மற்றும் பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் உட்பட, ரூ.400 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவு (IAD) முடக்கியுள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை (CID) சமீபத்தில் வெளிப்படுத்தியது.

இந்த சொத்துக்களில் 77 பெரிய நிலங்கள்,40 க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்கள், 12 ரத்தினக் கற்கள், 10 கிலோ கிராம்களுக்கு மேல் தங்கம், ஒரு பல்பொருள் அங்காடி, ஒரு மருந்தகம், இரண்டு ஹோட்டல்கள், ஒரு சோப்புப் பவுடர் இயந்திரம், நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள், ஏழு பல நாள் மீன்பிடி படகுகள், 328 மிதிவண்டிகள் மற்றும் இரண்டு படகுகள் உட்பட 1900 பேர்ச்சஸ் நிலம் அடங்கும் என்று பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலக உறுப்பினர்களின் பெயர்களும் ஆச்சரியமாக இருக்கிறது. "லடியா, பாதியா, சுத்தா, ஒலுமாரா, வெலே சுத்தா, படலஹீன், பாசிக்" என்பது அவர்களின் பெயர்கள்.

இந்த நாட்டில் பாதாள உலக உறுப்பினர்களின் பட்டியல் மிக நீளமானது. அவர்களை பாதாள உலக உறுப்பினர்களாக சமூகமயமாக்கியது ஊடகங்கள்தான். இவ்வளவு காலமாக, போதைப்பொருள் வர்த்தகம், பாதாள உலகம், அரசியல், பாதுகாப்புப் படைகள் மட்டுமல்ல, ஊடக வலையமைப்பும் இணைந்து செயல்பட்டு வருகின்றன என்பது இரகசியமல்ல.

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக, இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்களை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, சமூகத்தை அழிக்கும் ஊழல் மற்றும் ஊழல் வளையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ஒரு காலம் வந்துவிட்டது. இந்த சொத்து முடக்கம் ஒரு படியாகும். சட்டவிரோத வழிகளில் சம்பாதித்த பணம் கறுப்புப் பணம் என்று அழைக்கப்படுகிறது. இந்த கடத்தல்காரர்கள் இந்த கறுப்புப் பணத்தை பல்வேறு வழிகளில் முதலீடு செய்துள்ளனர்.

பயங்கரவாதச் செயல்கள், போதைப்பொருள் கடத்தல், மிரட்டி பணம் பறித்தல் அல்லது சூதாட்டம் போன்ற சட்டவிரோத வழிகளில் சம்பாதிக்கப்பட்ட பணம் கறுப்புப் பணம் என்று வரையறுக்கப்படுகிறது. இந்தக் கருப்புப் பணம் திடீரென கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது என்பதைக் காணலாம்.

தாங்கள் எவ்வாறு சம்பாதித்தீர்கள் என்பதை துல்லியமாக அறிவிக்க முடியாதவர்கள் பல்வேறு நிலைகளில் முதலீடு செய்துள்ளதாகவும், இது ஒரு கடுமையான பிரச்சனை என்றும் குற்றப் புலனாய்வுத் துறை சமீபத்தில் கூறியிருந்தது. மேலும், அரசாங்கத்திற்கு வரி செலுத்தாமல் வைத்திருக்கும் பணமும் இந்த வகையின் கீழ் வருகிறது.

இந்தக் கறுப்புப் பணம் மற்றும் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் முதலீடுகள் நாட்டின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கின்றன. இந்தக் கடத்தல் கும்பல் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதில் வலுவான ஆர்வத்தைக் கொண்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல், பாதாள உலகம் மற்றும் கருப்புப் பணத்தை இந்தக் கடத்தல் கும்பலை அம்பலப்படுத்தி சட்டத்தின் மூலம் தண்டிக்காமல் தடுக்க முடியாது. அதற்கான அடிப்படை பின்னணி தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கத்திப் பேசியே தங்களின் தவறான கருத்துகளைச் சரியானது என வாதிடுபவர்கள் பலருளர். அமைதியாகவும் இனிமையாகவும் பேசி தங்களின் கருத்துகளைக் கூறவேண்டும்.

பேசும்போது கூட, மிரட்டும் தொனியில் பேசுவது அநாகரிகமானது. அமைதியான மனிதர்கள் இத்தகையவர்களிடம் நட்புக் கொள்ளமாட்டார்கள்.

பொய்களைப் பேசுபவர்களுக்கு உண்மைகள் எதுவெனப் புரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். கருத்துச் சுதந்திரம் என்பது, கண்டபடி பேசுவதற்கானது அல்ல; சில அரசியல்வாதிகள் எப்படியும் பேசுவார்கள். அத்தகையவர்கள் கேலிக்குரியவர்களாகி விடுவர்.

சிலர் வதந்திகளைக் கேட்கப் பிரியப்படுவார்கள். அவர்கள், தங்களின் பொய்யான பேச்சுகளுடன் வதந்திகளையும் உள்நுழைத்து விடுவார்கள். நல்ல வார்த்தைகளுக்கு உயிருண்டு. பொய்களைப் புனைபவர் சமூகத்தில் நம்பிக்கை அற்றவர் ஆகின்றார். பொய், துன்பங்களைப் பிரசவிக்கிறது. பேச்சுகள் மூலம் ஒருவரைக் காயப்படுத்துவது மகா பாவம். நல்ல நெஞ்சில் இருந்து, அழகான சொற்கள் உற்பத்தியாகின்றன.

–நன்றி – பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### பாதை சீர்கேடு

ஒவ்வொரு அரசாங்கமும் பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போது, மலையக பிரதேசத்தின் பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காகப் பல கோடி ரூபாய் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறினாலும், 200 வருட காலமாக இம்மக்கள் இன்னும் பாதை வசதிகள் இல்லாமல் பெரும் சிரமத்திற்கு மத்தியில் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியா, அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குட்பட்ட மன்றாசி நகரத்திலிருந்து, ஆட்லோ தோட்டத்தின் ஊடாக அல்பியன் சந்திவரை சுமார் 04 கிலோ மீட்டர் தூரம் கொண்ட பிரதான வீதி பல வருடங்களாகப் புனரமைப்பு செய்யாத காரணத்தினால் சேரும், சகதியுடன் வயலை போன்று காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் ஆட்லோ அல்பியன் பெரிய நாகவத்தை சின்ன நாகவத்தை சென்மார்கர்ட் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 9,000 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாதையைப் புனரமைப்பு செய்து தருமாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதேச மக்கள் பல முறை கோரிக்கை விடுத்த போதிலும், இதுவரை எந்த ஒரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

- துவாரகஷான்



பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை–25

# 1960களின் பொருளாதாரச் சவால்கள்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1960களில் ஏற்றுமதி வருமானம் தொடர்ச்சியாகக் குறைவடைந்து வந்தது. இதனால் தன்னிறைவு அளவை அதிகரிப்பதற்கும் அரிசி இறக்குமதிக்கான தேவையைக் குறைப்பதற்கும் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருந்தன. நாற்பதுகளின் பிற்பகுதியிலிருந்து அறுபதுகளின் முற்பகுதி வரை உள்நாட்டு நெல் உற்பத்தியின் வளர்ச்சி அரிசி நுகர்வு விரைவான உயர்வை ஈடுசெய்யும் அளவுக்கு வேகமாக இருந்தது மற்றும் இறக்குமதியைச் சார்ந்திருப்பதை சுமார் 55 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாகக் குறைத்தது. ஆனால், இலங்கையர் உணவில் அரிசியின் முக்கிய இடம், மக்கள் தொகை அதிகரிக்கும் போது, தவிர்க்க முடியாமல் நுகர்வுத் தேவைகளின் விரைவான வளர்ச்சிக்கு வித்திட்டது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை வாங்குவதற்கு வெளிநாட்டு வருமானத்தில் கிடைக்கும் தன்மையில் மெதுவான அதிகரிப்பு மற்றும் உற்பத்தியாளர் பொருட்களை விட உணவை வாங்க இந்த வருமானத்தைப் பயன்படுத்துவதற்கான மகத்தான வாய்ப்பு செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, பிந்தைய சதவீதம் கூட மிக அதிகமாகக் கருதப்பட வேண்டும். இந்த சதவீதத்தைக் குறைப்பது இலங்கையின் இறக்குமதி அளவை மறுசீரமைக்கவும், நுகர்வோரிடமிருந்து உற்பத்தியாளர் பொருட்களுக்கு மேலும், ஒப்பீட்டு மாற்றத்தைக் கொண்டுவரவும் எந்தவொரு முயற்சியினதும் ஒரு முக்கிய பகுதியாக இருந்திருக்க வேண்டும். ஆடம்பர நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகள் இப்போது குறைக்கப்பட்ட நிலையில், அரிசி மொத்த இறக்குமதியில் முக்கியமான பகுதியாக மாறியுள்ளது (1960களின் முற்பகுதியில் சுமார் 15 சதவீதம்).

நெல் தவிர, மற்ற விவசாய பயிர்களுக்கு, உற்பத்தியில் கணிசமான அதிகரிப்புக்கான வாய்ப்புகள் இருந்தன, ஏனெனில், இதுவரை கவனம் முக்கியமாக நெல் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதில் எந்தவொரு முன்னேற்றமும், செயலில் உள்ள அரசாங்க ஊக்கத்தின் தொடர்ச்சியை (குறிப்பாக விரிவாக்க சேவைகளை வழங்குவதிலும் பொருத்தமான சட்ட கட்டமைப்பை உருவாக்குவதில் அதிகரித்த வெற்றி) சார்ந்துள்ளது, மேலும், நல்லின விதைகள், உரங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கை நடைமுறைகளுக்கான பிற பொருள் தேவைகள் கிடைப்பதையே சார்ந்துள்ளது. ஆனால், பல பொருளாதார அதிகரிப்புகள் உண்மையில் உற்பத்தியாளர் செயலற்ற தன்மை மற்றும் அறியாமை காரணமாக உணரப்படவில்லை. வெளிப்படையாக, இந்த பிந்தைய தடைகளைக் கடப்பதில் பொதுக் கொள்கை வெற்றிபெறும் வேகம்தான் விவசாய உற்பத்தி எவ்வளவு வேகமாக வளரும் என்பதை முதன்மையாகத் தீர்மானிக்கும். ஆனால், இலங்கை இதில் தோல்வியடைந்தது.

துறை சார்ந்த பார்வையிலிருந்து பார்க்காமல் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய பிரச்சனை ஐம்பதுகளில் இருந்ததைப் போலவே தோன்றுகிறது: உண்மையில் விரைவான உற்பத்தி வளர்ச்சியை உருவாக்க போதுமான அளவு சேமிப்பு மற்றும் முதலீட்டை வளர்ப்பதில் உள்ள சிரமம் பாரிய சவாலானது. உண்மையில், இந்தப் பிரச்சினை சமகாலத்தை விட எதிர்காலத்தில் மிகவும் கடுமையானதாக இருக்கும் என்பதைக் கொள்கை வகுப்பாளர்கள் உணரவில்லை என்றே தெரிகிறது.

மக்கள்தொகை வளர்ச்சியின் அழுத்தம், தேசிய வருமானத்தில் அதிகரிப்புகளை முதலீட்டு நோக்கங்களுக்காக அல்லாமல் நுகர்வுக்குப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கிறது, மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் குறைவதற்கான அறிகுறியைக் காட்டவில்லை. கடந்த காலத்தில் உள்நாட்டு சேமிப்பின் முக்கிய ஆதாரமான ஏற்றுமதி செழிப்பிலிருந்து வளரும் உபரிகள் எதிர்காலத்தில் தொடர்ந்து கிடைக்கும், ஆனால், இப்போது, நுகர்வு தரநிலைகள் கடந்த கால வழக்கமான நிலைகளுக்குக் கீழே குறைக்கப்பட்டுள்ளதால், நுகர்வோர் தங்கள் வருமானத்தில் அதிகரிப்புகளை நுகர்வோர் பொருட்களுக்கு செலவிட அதிக விருப்பம் காட்டுவார்கள், மேலும், ஏற்றுமதி வருமானம் கணிசமாக உயர்ந்தால், அரசாங்கம் இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் நுகர்வு உயர அனுமதிக்கவும் கடுமையான அழுத்தத்தில் இருக்கும்.

மூலதன வரவுகளைப் பொறுத்தவரை நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக இருக்க வாய்ப்பில்லை. தனியார் வரவுகள் சிறியதாகவும், அரசுகளுக்கிடையேயான ஓட்டங்கள் கடந்த காலத்தை விட அதிகமாகவும் இருந்தது. எனவே, முதலீட்டு நிதி பெரும்பாலும் உள்நாட்டு சேமிப்பைச் சார்ந்தே இருந்தது. உள்நாட்டு சேமிப்பைக் கணிசமாக அதிகரிக்க, 1950களில் ஏற்றுமதி செழிப்பு காலங்களில் இந்த இலக்கை அடையக்கூடிய தனியார் மற்றும் பொது நுகர்வு செலவினங்களின் வளர்ச்சியை மிதமாகத் தடுத்ததோடு ஒப்பிடும்போது, இப்போது மிகவும் கடுமையான உள்நாட்டு சிக்கன நடவடிக்கை தேவைப்பட்டது. கடந்த கால நுகர்வு அளவுகள் அதிகரித்த நினைவுகள் இன்னும் புதியதாகவும், தற்போதைய சிக்கன நடவடிக்கைகளின் மீது வெறுப்பு வலுவாகவும் இருப்பதால், தவிர்க்க முடியாதது அல்லது மிகவும் உறுதியான முறையில் நியாயப்படுத்தப்படாவிட்டால், இன்னும் பெரிய தியாகங்களுக்குப் பொதுமக்கள் ஒப்புதல் அளிக்க வாய்ப்பில்லை. எனவே, கணிசமாக அதிகரித்த உள்நாட்டு சேமிப்பு மற்றும் முதலீட்டிற்கான வாய்ப்பு பிரகாசமாக இருக்கவில்லை.

> **திறமையற்ற வடிவிலான தன்னாட்சிக்கான வாய்ப்பை மட்டுமே வழங்கவில்லையா? இவை அரசாங்கத்தின் பிரதான பொருளாதார வினாக்களாக மேலோங்கின**

வரும் ஆண்டுகளில் வெளிப்படக்கூடிய தொழிலாளர் படைக்கு வேலைவாய்ப்பைக் கண்டுபிடிப்பதில் உள்ள சிக்கல், தனிநபர் வருமானத்தை உயர்த்துவதில் உள்ள சிக்கலை விடத் தீர்க்க இன்னும் கடினமாக இருந்தது. கடந்த கால மக்கள்தொகைப் போக்குகளின் இயற்கையான விளைவுகள், கல்வி வசதிகளை வழங்குவதில் உள்ள தடைகள் மோசமடைவதால் கல்வி பரவல் மெதுவாகி வருவதால், தொழிலாளர் சக்தியின் வளர்ச்சி விகிதம் படிப்படியாக ஐம்பதுகளின் ஆண்டு விகிதமான 2.2 சதவீதத்திலிருந்து சுமார் 2.6 சதவீத மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தை நோக்கி உயர்த்தியது.

1970ம் ஆண்டளவில், பிறப்பு விகிதத்தில் எதிர்பாராத விதமாகக் கூர்மையான சரிவு ஏற்படாவிட்டால், இலங்கையின் மக்கள் தொகை 13,000,000 ஆகவும், தொழிலாளர் சக்தி 4,500,000 ஆகவும் இருக்கும் என எதிர்வு கூறப்பட்டது. தொழில்துறை உற்பத்தியின் மிக விரைவான வளர்ச்சி கூட மிகக் குறைந்த கூடுதல் உழைப்பையே உறிஞ்சும். இதுவரை கட்டப்பட்ட அரசாங்க ஆலைகள் அதிக மூலதனம் தேவைப்படும் தொழிற்சாலைகளாகும், மேலும் கட்டுமானத்தில் உள்ளவை அல்லது தற்போது திட்டமிடப்பட்டு வரும் உருக்கு, டயர்கள் மற்றும் குழாய்கள், தானிய அரைத்தல் மற்றும் உரங்கள் இன்னும் அதிகமாக உள்ளன. 1960 முதல் பெருகிவரும் சிறிய அளவிலான தனியார் தொழில்துறை வகை குறைவான மூலதனம் தேவைப்படும் தொழிற்சாலையாகும், ஆனால் அது கிடைக்கக்கூடிய உழைப்பில் ஒரு சிறிய பகுதியினருக்கு மட்டுமே வேலைவாய்ப்பை வழங்கியது. உள்நாட்டுக் காரணிகளுடன் ஒப்பிடும்போது, இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி காரணிகளின் விலைகள் அதிகரிப்பதால், தனியார் நிறுவனங்கள் மற்றபடி செய்வதை விட அதிக உழைப்பு தேவைப்படும் முறைகளைப் பயன்படுத்தத் தூண்டப்பட்டன. இருப்பினும், தொழில்துறை உற்பத்தியின் உயர் கணிப்புகளைப் பயன்படுத்தினாலும், புதிய தொழிலாளர்களுக்கு வேலைகளை வழங்குவதற்கான முக்கிய சுமை ஐம்பதுகளில் இருந்ததைப் போலவே, விவசாயம் மற்றும் சேவைத் துறைகளில் தொடர்ந்து விழுந்தது, அங்குத் தொழிலாளர் வளங்களின் ஒப்பீட்டளவில் உற்பத்தி செய்யாத பயன்பாடுகள் முழுமையான செயலற்ற தன்மைக்குப் பங்களித்தன.

இருப்பினும், இங்கும் கூட, இலங்கையின் வேகமாக உயர்ந்து வரும் கல்வி நிலை ஒரு கடுமையான சிக்கலை ஏற்படுத்தியது. கல்வி அதிகரிப்பது என்பது, தொழிலாளர் படையில் புதிதாக நுழைபவர்கள் பலர் விவசாயம் மற்றும் சேவைத் துறையின் பெரும்பகுதியில் உள்ள வேலைவாய்ப்புகளை அவர்களின் சமூக மற்றும் அறிவுசார் நிலைக்குப் பொருந்தாதவை என்று நிராகரிக்கின்றனர். தொழில்துறைக்கு வெளியே, அவர்களின் பரிசீலனைக்கு உள்ள ஒரே வேலைகள் தொழில்முறை மற்றும் எழுத்தர் சேவைத் தொழில்கள் மட்டுமே. வேலையின்மை பிரச்சினையின் எந்த அம்சம் மிகவும் தடைசெய்யக்கூடியது என்று சொல்வது கடினம். ஆண்டுதோறும் சுமார் 100,000 புதிய தொழிலாளர்களுக்கு வேலை தேடுவதில் உள்ள ஒட்டுமொத்த பிரச்சனை அல்லது ஒவ்வொரு ஆண்டும் இலங்கை கல்வி முறையிலிருந்து வெளிவரும் மிகக் குறைந்த ஆனால், வளர்ந்து வரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு பொருத்தமான வேலைவாய்ப்பைப் பெறுவதில் உள்ள சிரமம்.

உள்ளூர் சந்தைக்கான உற்பத்தியில் கவனம் செலுத்துவது இலங்கைக்கு ஒரு முட்டுச்சந்தாக இருக்கிறதா? அதன் ஒப்பீட்டுக் காரணி மானியம் இன்னும் சிறப்பு ஏற்றுமதி உற்பத்திக்கு மிகவும் பொருத்தமானதல்லவா, மேலும் உள்நாட்டுச் சந்தையை நோக்கி உற்பத்தியை மறுசீரமைப்பது குறிப்பாகத் திறமையற்ற வடிவிலான தன்னாட்சிக்கான வாய்ப்பை மட்டுமே வழங்கவில்லையா? இவை அரசாங்கத்தின் பிரதான பொருளாதார வினாக்களாக மேலோங்கின.

பொசொன் விளக்கீட்டு பூஜையில்

# SLT-MOBITEL பங்கேற்பு















இலங்கையின் கலாசார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கான தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில், SLT-MOBITEL, அண்மையில் நடைபெற்ற புனித பொசொன் விளக்கீட்டு பூஜை நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தது.

இலங்கை அரசாங்கத்தினால் மிஹிந்தலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வினூடாக, இலங்கையின் ஆழமான சமய பாரம்பரியம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த ஆயிரக் கணக்கான யாத்திரிகர்களை கவர்ந்திருந்தது. இந்த ஆண்டின் விளக்கீட்டு பூஜை நிகழ்வில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க பங்கேற்றிருந்தார்.

வலையமைப்பை ஏற்படுத்துவதற்கு அப்பாலான தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில், நிலைபேறாண்மை, டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் சமூக வலுவூட்டல் போன்றவற்றில் கவனம் செலுத்தும் செயற்பாடுகளில் SLT-MOBITEL தன்னை ஈடுபடுத்திய வண்ணமுள்ளது.

பிரதிபலிப்பு, ஒற்றுமை மற்றும் ஆன்மீக அர்ப்பணிப்பு ஆகியன நிறைந்த பொசொன் பௌர்ணமியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், SLT-MOBITEL இனால் யாத்திரிகர்களுக்கு அனுபவத்தை மேம்படுத்துவதற்கான பிரதான உட்கட்டமைப்பு ஆதரவு வழங்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் சூழல், சமூக மற்றும் ஆளுகை அர்ப்பணிப்புக்கமைய, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'Data Dansala' ஊடாக, பங்கேற்றிருந்தவர்களுக்கு டேட்டா இலவசமாக வழங்கப்பட்டு, சமயசார் நிகழ்வுகளில் ஈடுபடுகையில் தமது அன்புக்குரியவர்களுடன் தொடர்பில் இருப்பதை உறுதி செய்திருந்தது.

மேலும், அனுராதபுரத்திலிருந்து மிஹிந்தலைக்கு இலவச பேருந்து போக்குவரத்து சேவையையும் SLT-MOBITEL முன்னெடுத்திருந்தது. அதனூடாக பெருமளவானோருக்கு இந்த விளக்கீட்டு பூஜையில் பங்கேற்கும் வசதி வழங்கப்பட்டிருந்தது.

சமூக சென்றடைவை வலிமைப்படுத்தி, SLT-MOBITEL இனால் ஐஸ்கிறீம் தன்சல் வழங்கும் நிகழ்வும் அதன் அனுராதபுர கிளையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனூடாக யாத்திரிகர்கள் மத்தியில் குதூகலம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பொசொன் விளக்கீட்டு பூஜை நிகழ்வு, யாத்திரிகர்களை ஈடுபடுத்தியிருந்த நிகழ்வாக அமைந்திருந்ததுடன், நவீன டிஜிட்டல் அணுகலுடன் அனுகூலம் பெறக்கூடிய வகையிலும் அமைந்திருந்தது.

Prime Group இனால் மிதக்கும்

# சொகுசு விலா 'Venezia' அறிமுகம்

நீங்கள் நாளாந்தம் வெனிஸ் நகரில் கண்விழித்தால் எப்படி இருக்கும்? அந்த அனுபவத்தை இனி நீங்கள் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Prime Groupஅறிமுகப்படுத்தும் இலங்கையின் முதலாவது நீர் விலா தொனிப்பொருளில் அமைந்த சேவையளிக்கப்பட்ட தொடர்மனைத் தொகுதியான Venezia, நீர்கொழும்பு களப்பு பகுதியில் சிறந்த காட்சியமைப்புகளுடன் நிறுவப்படுகிறது. வெனிஸ் நகரின் அழகையும், அம்சங்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்தத் தொடர்மனை விலாத் தொகுதி, இலங்கையின் நவீன வசிப்பிட சௌகரியத்துக்கு, வெனிஸின் அலங்கார அம்சங்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

Veneziaஇல் நீங்கள் தொடர்மனை ஒன்றின் உரிமையாளராவது மட்டுமன்றி, புதிய வாழ்க்கை முறைக்கு வழிகோலும் புதுவித அனுபவமாகவும் அமைந்திருக்கும்.

Prime Group இன் பிரத்தியேகமான தரம் மற்றும் சிறப்பைக் கொண்ட Venezia, ஒரு வசிப்பிடம் மட்டுமன்றி, வாழ்நாள் அனுபவத்தைப் பெற வேண்டிய பகுதியாகவும் அமைந்துள்ளது. கனவு கொண்டோலா சவாரிகள் முதல் infinity lagoon poolமற்றும் மிதக்கும் படகுகள், சிறுவர் விளையாட்டு பகுதிகள் மற்றும் sunken-lounge lagoon barபோன்ற அம்சங்கள் சொகுசான அனுபவத்தை உறுதி செய்யும். இலங்கையின் முதலாவது நீர் சினிமா திரையரங்கு, ஒவ்வொரு தொடர்மனையிலும் private jacuzzisமற்றும் பிரத்தியேகமான aquatic party venue போன்றவற்றுடன், Veneziaஇல் வாழ்க்கை என்பது கொண்டாட்டங்கள் நிறைந்ததாகவும், பரிபூரணமானதாகவும் அமைந்திருக்கும்.

Prime Groupபிரதம நிறைவேற்று அதிகாரி ருமிந்த ரன்தெனிய கருத்துத் தெரிவிக்கையில், "Venezia என்பது ஒரு நிர்மாணத் திட்டத்துக்கு அப்பாற்பட்டது. இலங்கையின் ரியல் எஸ்டேட் எந்தளவு வளர்ச்சியடைந்துள்ளது மற்றும் அதன் எதிர்காலத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. எதிர்பார்க்கப்படும் வாடகை 12%இனாலும், முதலீட்டு தொகை 80%இனாலும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில்,



இந்தத் திட்டத்தினூடாக புதிய வாழ்க்கைமுறை மற்றும் மதிநுட்பமான முதலீடு போன்றன வழங்கப்படும். வெனிஸை மையமாகக் கொண்ட வடிவமைப்புடன், களப்பை முகப்பாக கொண்ட அமைவிடம் போன்றவற்றினூடாக, Venezia அழகு, சௌகரியம் மற்றும் பெறுமதி நிறைந்ததாக அமையும். நீர்கொழும்பு நகரில் சர்வதேச ரீதியில் கீர்த்திநாமம் பெறும் வதிவிடப்பகுதியின் உரிமையாளராகத் திகழ்வது என்பது அரிய வாய்ப்பாகும்."என்றார்.

இந்த வாழ்க்கை முறையை மேம்படுத்துவதில் ஓர் ஆரோக்கிய சரணாலயமும், இத்தாலிய, ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு உணவு வகைகளை வழங்கும் ஒருதனித்துவமான உணவகமாகவும் அடங்கியிருக்கும். பிரத்தியேக பட்லர் சேவை மற்றும் Prime Groupநிபுணத்துவத்துடன் நிர்வகிக்கப்படும் தொழில்முறை வீட்டு பராமரிப்பு போன்ற பிரீமியம் வசதிகள் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, நீர்கொழும்பு கடற்கரை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு துறைமுக நகரம், முன்னணி பாடசாலைகள், வைத்தியசாலைகள், சுப்பர் மார்க்கெட்கள் மற்றும் பல முக்கிய பகுதிகளை அண்மித்து Veneziaஅமையவுள்ளது.

சூரியஅஸ்தமனநடைபயணம்முதல்மகிழ்ச்சி கரமானresort-styleவசதிகள்வரை, Veneziaஅன்றாட தருணங்களை மாயாஜாலமாக மாற்றுகிறது. உங்களின் முதலீடு,இடம்பெயர்வு அல்லது மீண்டும் வாழ்க்கையை ஆரம்பிப்பது என எதுவாக இருந்தாலும், இந்தவீடு ஒவ்வொரு நாளும் விடுமுறைபோல உணரவைக்கும்.



மாற்றுத் திறனாளிகளல்ல

# மாற்றத்தின் திறன்கள்



வெள்ளை மனதுடை கள்ளமில்லா
மலர்களாய்
வெள்ளைப் பிரம்புகள் வழிகாட்டும்
அவர்களை
கல்விச் சாதனைக்கு தடையில்லை
பார்வையென்றும்
சொல்லி நின்றனர் சாதனைகள்
படைத்து

ஊனம் நமக்கல்ல ஊரவர்
கண்ணுக்கேயென்று
உரத்துக் கூறினர் உழைப்பின்
வெற்றியால்
ஊழலும் தெரியாது பொய் களவும்
தெரியாது
காலக் கணக்கில் தான் அவர் விதியிற் சதி....!

ஞாலம் போற்றிடக் கலைகள் கற்று
காலம் மாற்றிட விரைகின்ற விதைகளாய்
போராடிப் போராடித் துளிர்க்கும்
விருட்சங்களாய்
வேரூன்ற மறுக்கவில்லை பயனுறு
தருக்களாய்....

புற்றெழுத்துத் துணையிருக்க
புவியாழத் தடையேது....?
கற்றவராய் கவினுடன் மற்றவர் போல்
நாம்வாழ
கல்விக் கண்களே போதுமென
உரத்துக் கூறியவர் உளிகளாய்
மாறினர்

நம்பிக்கை கொண்டு நல் முயற்சியும்
கொண்டு
அம்பிகையின் அருளுடன் நல்லாசியும் பெற்று
துவளாத நெஞ்சத்து தூயவராய்
சாதிக்கப் பிறந்தவராம் சாதனை நாயகள்

வாழ்வு வலிக்கத் தாழவில்லை மனதும்
வீழ்வுகள் கண்டும் எழுந்திடவும் தவறவில்லை
பாழ்பட்ட சதிகளைக் கண்டதுமில்லை
அல்லவை காணப் பணிக்கவுமில் லை
நல்லதை மட்டும் உணர்ந்திடும் வரமவர்க்கு....

வெண்பிரம்பின் வீரியம் கண்களென
ஒளிகொடுக்க
மண்ணிலவர்க் குறையேது ?
தண்ணீரில் மீன்களாய் தனியுலகும்
அவர்க்குண்டு
வஞ்சனைகள் சூழ்ச்சிகள் காணாத உலகு அது

விதியென்ன விதியென்று மதியால்
வென்று
பட்டங்கள் பதவிகளாற் பாராளும்
நாயகர்களாய்
அதியுயர் சாதனைகள் படைத்து
மாற்றத்தின் திறனாளிகளாய்
மாறி நிற்கும் சூரியன்கள்

உலகத்தைப் பார்க்காது உலகையே
தம்மைப் பார்க்கும் வண்ணம்
உயர்வுறும் அவர் வாழ்வில்
இலட்சியங்கள் தூரமில்லை....
இலக்குகளும் பாரமில்லை...

வானத்து நட்சத்திரங்களாய் ஒளிரும்
மானிடரில்
வானத்துச் சந்திரனை அவர்க்கு
நிகரென்பேன்
இரவின் இருள் கலைக்கும்
தனிச்சிறப்பைக்கொண்டதனால்
இருள் இங்கு என்றும் நிரந்தரமில்லை
லூலி பிரெய்லிகள் நம்மிலும் உள்ளதால்
வழியுண்டு வாழ வாழ்வோம் மகிழ்வாய்.

குகதா



# போர் முரசமும் புனிதப் பல்லவிகளும்...!



போட்டி போட்டு போர்கள் புரிகிறான்.
புனிதம் என்று மனிதத்தை அழிக்கிறான்.
காட்டு மிருகங்கள் போலவன் நடக்கிறான்
கடைசியில் உலகையே
அழித்திட துடிக்கிறான்.

நூறு மதங்களை கடவுளைப் படைக்கிறான்.
நூறாய் பிரிந்து இனங்களு மாகிறான்.
கூறு கூறாய் நிலங்களைப் பிரிக்கிறான்
கூறு கெட்ட கொள்கையை
விதைக்கிறான்.

தன்மத மொன்றே பெரிதென ஓதுறான்
தன்னினந் தானே உயர்ந்ததாய் சொல்கிறான்.
வன்முறை வாளினை கைகளில் ஏந்தியே
என்மறை உரைப்பது அகிம்சையே என்கிறான்.

போட்டி பொறாமை எரிச்சலில் உழல்கிறான்
புனைகதை அனைத்தையும்
வரலாறாய் திரிக்கிறான்
ஆக்கச் சக்திகள் ஆன அணுக்களை
அழிக்கும் ஆயுத மாக்கியே
மாய்கிறான்.

இயற்கை வளங்கள் எல்லாம்
அழியிது
இருந்தும் போர் போர் என்ற
முரசம் ஒலிக்கிது
நீயா நானா போட்டி வலுக்குது
நிம்மதி இழந்து மனிதன்
அலைகிறான்...!

ஷெல்லிதாசன்



# உயிர் நிலங்கள்




பூக்களையும் பிஞ்சுகளையும்
பிய்த்துக் கசக்கி வீசினார்கள்
பரந்து விரிந்த நிழல் தரு
கிளைகளை
வெட்டி மகிழ்ந்தார்கள்
மொட்டையாய் நின்ற மரங்களின்
உடல்களை
அடியோடு அறுத்தார்கள்
நிலம் வெறுமையாக இருந்தது

ஆழப்புதைந்திருந்த
வேர்களின் மூச்சொலி
அவர்கள் செவிகளுக்குக்
கேட்கவில்லை
கண்களுக்கும் புலப்படவில்லை.

மகிழ்ச்சியுடன்
எஞ்சியிருந்த பூக்களையும் கிளைகளையும்,
மரங்களையும்
அகற்றத் தொடங்கினார்கள்.

அஷ்ரபா நூர்தீன்




## குன்று தோறாடும் குமரனை தரிசிக்க

# கானக பாதயாத்திரை இன்று ஆரம்பம்

**விபுலமாமணி வித்தகர் வி.ரி. சகாதேவராஜா**

(ஒருங்கிணைப்பாளர் - யாழ்.சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரைக்குழு) ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ,
அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் , சிரேஸ்ட ஊடகவியலாளர் காரைதீவு.





குன்று தோறாடும் குமரனை தரிசிக்க கதிர்காமத்திற்கான 2025 ஆம் ஆண்டுக்கான கானக பாதயாத்திரை வெள்ளிக்கிழமை (20) காலை ஆரம்பமாகின்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன், தொடங்கி ஜூலை மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

அதனை முன்னிட்டு உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து பிரதம குரு சிவ ஸ்ரீ க.கு. சீதாராம் குருக்களினால் இன்று 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படும் விசேட அதிகாலை பூஜையுடன் கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படுகிறது.

இம்முறை காட்டுப் பாதை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜனின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் வைக்கப்படவிருக்கிறது.

இந்தவேளையில், வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து 55 நாட்களில் 98 ஆலயங்களைத்தரிசித்து 815 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிக மிக நீண்ட தூர கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர் உகந்த மலை முருகன் ஆலயத்தைச் சென்றடைந்திருக்கிறார்கள்

அவர்களோடு சுமார் 5,000 பேரளவில் வெள்ளிக்கிழமை (20) காலை காட்டுப் பாதையில் பிரவேசிக்க லாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு,வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாகக் கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம். குறைந்தது ஆறு நாட்கள் பயணிப்பது வழமை.

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமண, வியாளை, கட்டகாமம் ஆகிய காடுகளைக் கடந்து, ஆறு நாட்களாகப் பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிக்கின்றனர்.

இப்புனித பாதயாத்திரையில் இலங்கையில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து சுமார் 40,000 பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். எனினும், அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இருந்தே அதிகளவான யாத்திரீகர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து 80 சதவீத பக்தர்கள் புனித யாத்திரை வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

2000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்திற்கே நம்மைக் கூட்டிச் செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டுப் பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்குப் பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்பப் பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.





இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப்பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

காட்டுக்குள் இறங்கி விட்டால் அனைவரது சுய நாமங்கள் மறந்து "சாமி" என அழைக்கப்படுவது மற்றுமொரு மரபாகும்

இவை மட்டுமல்ல, இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல் காற்று, கச்சான் காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றைச் சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.




பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருகப் பெருமானே நேரடியாகப் பயணத்தில் அனைவரையும் அழைத்துச் செல்கிறான். இது மட்டும் உண்மை.







# அகதிகளது எதிர்காலம்

## ஜூன் 20, உலக அகதிகள் தினம்

பெரியசாமிப்பிள்ளைசெல்வராஜ்
முன்னாள்
ராஜதந்திரி/ தூதுவர்

2024 ஆம் ஆண்டு சோமாலியா மற்றும் எத்தியோப்பியாவில் இருந்து சுமார் 260 அகதிகளை ஏற்றிக் கொண்டு ஏடன் வளைகுடா வழியாக சென்ற படகொன்று ஏமன் கடற்கரை அருகே கவிழ்ந்ததில் சுமார் 49 பேர் பரிதாபகரமாக உயிரிழந்ததாகவும், ஏனையோர் பாதுகாக்கப்பட்டதாகவும் , அதுபோல இம்மாதம் 17ஆம் திகதி தெற்கு இத்தாலியில் மத்தியதரைக் கடல் பகுதியில் பயணித்த இரண்டு படகுகள் கவிழ்ந்ததால் அதில் பயணித்த அகதிகளில் 11பேர் உயிரிழந்தும், 64 பேர் காணாமல் போனதாகவும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் மனதை நெருடுகின்றது.

கடந்த காலங்களில் தென்னாசிய நாடுகளில் இருந்து அவுஸ்திரேலியா,நியூசிலாந்து, போன்ற நாடுகளுக்கு சட்டவிரோதமான முறையில் படகில் சென்ற மக்கள் பரிதாபகரமாக உயிரிழந்ததனையும் நினைவு கூறுதல் அவசியம்.

தான் இருந்த வீட்டையும், உறவினர்களையும், நாட்டையும் இழந்து தங்களுடைய உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக சட்ட விரோதமான முறையில் படகுகள் மூலம் வேற்று தேசம் நோக்கி பயணிக்கும் அகதிகள் அடுத்தடுத்து கடலில் மூழ்கி மரணிக்கும் சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது எமக்கு ஒரு விடயம் புலனாகின்றது. அவர்கள் ஏன் தனது சொந்த தாயகத்தை விட்டு வெளியேற முயற்சிக்கின்றார்கள் ?

உறவுகளை இழந்தவன் அனாதை. சொந்த தேசத்தை இழந்தவன் அகதி எனக் கூறப்படுவதுண்டு.

உள்நாட்டு யுத்தங்களினால் பாதிக்கப்படுவோர் அனேகர்.நாடுகளுக்கு இடையிலான யுத்தங்களினாலும், பயங்கரவாதத் தாக்குதல்களினாலும் சிக்கி சின்னாப்பின்னம் ஆகுவோர் ஏராளம். அரசாங்கங்களின் அச்சுறுத்தல்களினால் அச்சத்துடன் வாழ்வோர் பலர்.

வறுமை, பசி, பட்டினி ஆகியவற்றால் வாழ்க்கையைக் கொண்டு செல்ல நித்தமும் போராடுவோர் எண்ணற்றவர்கள். இன, மத, அரசியல், கருத்து வேறுபாடு போன்ற இன்னோரன்ன காரணிகளினால், தமது தாய் நாட்டையே வெறுத்து வேறு நாடுகளுக்கு செல்ல எத்தனிப்போர் பலர்.

இயற்கையின் சீற்றத்தால் வாழ முடியாத நிலை ஏற்படுகின்ற பொழுது பிற நாடுகளுக்கு செல்ல முயல்பவர்களும் இதற்குள் அடக்கம்.

தம்மிடமிருக்கின்ற சேமிப்பையும், வாழ்வாதாரத்தையும். இருப்பிடத்தையும், உறவுகளையும் , உதறித் தள்ளி விட்டு ஒருவர் வேறு நாட்டிற்குப் குடிபெயர்கின்றார் என்றால் அது எந்தளவுக்கு அவரது மனதில் ஒரு மாறா வடுவினை ஏற்படுத்தியிருக்கும் என்பதனை நோக்க வேண்டும்.

அவரது எண்ணம், இலட்சியம் யாவும் தனது சொந்த மண்ணிலிருந்து விடுபட்டு தப்பி உயிர் பிழைத்தால் மாத்திரம் போதும் என்ற உணர்வுகள் மாத்திரம் தான். இவ்வாறானவர்களையே " அகதிகள் " என்ற வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றனர்.

1951ஆம் ஆண்டின் அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனமானது 'அகதி' என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் தருகின்றது.

"அகதி" என்பது, இனம், மதம், தேசிய இனம், குறிப்பிட்ட சமூகக் குழுவொன்றில் உறுப்பாண்மை, அரசியல் கருத்து என்பவை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டவரும், அவருடைய நாட்டுக்கு அல்லது சொந்த இடத்துக்கு வெளியில் இருப்பவரும், அந்த நாட்டினுடைய பாதுகாப்பைப் பெற முடியாத அல்லது பயம் காரணமாக அவ்வாறான பாதுகாப்பை நாட விரும்பாதவருமான ஒருவரைக் குறிக்கும். அகதி என்ற கருத்துரு, மேற்படி உடன்பாட்டின் இணைப்புக்கள் மூலமும், ஆபிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் நடைபெற்ற பிரதேச மாநாடுகளிலும் விரிவாக்கம் பெற்றது. இதனால், சொந்த நாட்டில் இடப்பெறும் போர் அல்லது வேறு வன்முறைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறுபவர்களும் அகதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அகதிகள் என்பவர்கள் யார் ?, அவர்களது உரிமைகள், புகலிடம் கொடுத்த நாடுகளின் பொறுப்புகள் என்ன போன்றனவைகள் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சர்வதேச அகதிகள் தினமானது ஒவ்வொரு வருடமும் ஜூன் 20 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

அகதிகளின் அவல நிலையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், துன்பங்களைச் சமாளிப்பதில் அவர்களின் மன உறுதியை அங்கீகரிக்கவும் அனுசரிக்கப்படுகிறது.

இந்த நாள் மோதல், துன்புறுத்தல் அல்லது வன்முறை காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ள அகதிகளின் தைரியம், வலிமை மற்றும் உறுதிப்பாட்டைக் கௌரவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

உலக அகதிகள் தினம், அகதிகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களின் சமூகங்களுக்கு அவர்கள் செய்யும் நேர்மறையான பங்களிப்புகளை பிரதிபலிக்கும் வாய்ப்பை வழங்குகிறது. உலகளவில் மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கும் உலகளாவிய அகதிகள் நெருக்கடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இது ஒரு நாள்.

பல்வேறு காரணிகளினால் ஏனைய நாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரி செல்கின்ற மக்களுக்கு ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் தினமாக இந்த தினம் கருதப்படுகின்றது.

அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையினது A/RES/55/76 தீர்மானத்தின்படி, ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி "சர்வதேச அகதிகள் தினமாகக்" கொண்டாடப்பட வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இன்று உலகில் அகதிகள் தொடர்பான செய்திகள் பரவலாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. தமது உயிரைப் பற்றி கவலைப்படாமல் , அகதிகள் தமது தாய் நாடுகளிலிருந்து உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய பயணங்களை மேற்கொண்டு, பிற நாடுகளுக்கு தப்பிச் செல்ல எத்தனிக்கின்றனர்.

2023 ஆம் ஆண்டின் இறுதி கட்டத்தில் சுமார் 11.73 கோடி மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையம் தெரிவித்துள்ளது. குறித்த எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டு முதல் பகுதியில் தொடர்ந்தும் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்வோரின் எண்ணிக்கை தொடர்ந்து பன்னிரெண்டு ஆண்டுகளாக அதிகரித்து வரும் நிலையில், 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள அகதிகள் , புகலிடக் கோரிக்கையாளர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் நாடற்றவர்களின் எண்ணிக்கையைக் கண்காணிக்கும் புள்ளிவிவரங்களைக் கோடிட்டுக் காட்டும் ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தானிகலாலயம் உலகளாவிய போக்குகள் அறிக்கையில் இந்த புதிய தரவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெருமளவிலான இடப்பெயர்வுகளுக்கு மோதல் என்பது தான் மிக ஆழமான தூண்டுதலாக காணப்படுவதாக என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையத்தின் தலைவர் பிலிப்போ கிராண்டி தெரிவித்துள்ளார்.

"சர்வதேச புவிசார் அரசியலில் மாற்றம் ஏற்படாத வரை, இந்த எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதை நிறுத்த முடியாது " என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சிரியாவில் இகம்பெற்ற போர் உலகின் மிகப் பெரிய இடப்பெயர்வுக்கு நெருக்கடியாக உள்ளதுடன், 13.8 மில்லியன் மக்கள் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெயர வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு சூடானில் ஏற்பட்ட மோதலின் காரணமாக சுமார் ஆறு மில்லியன் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதுபோல இஸ்ரேலுக்கும், காஸாவுக்கும் இடையிலான யுத்தத்தில் சுமார் 1. 7 மில்லியன் மக்கள் காஸாவின் உள்ளேயே இடம் பெயர்ந்து இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று ஆப்கானிஸ்தான், சிரியா , கொங்கோ குடியரசு , யுக்ரெயின், மியன்மார், சூடான், எதியோப்பியா , கென்யா, சோமாலியா , கொங்கோ ஜனநாயக குடியரசு, வெனிசுவேலா , ஆர்மேனியா போன்ற நாடுகளில் நிலவும் மோதல்கள், வன்முறைகள் ஆகியவற்றின் காரணமாக அங்கிருந்து அகதிகளாக வெளியேறும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக பொருளாதார ரீதியாக, அகதிகளாக, வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே செல்கின்றது.

உலகளாவிய ரீதியில் இரண்டு செக்கன்களுக்கு ஒருவர் வீதம் இடம்பெயர்வதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராயலம் சுட்டிக்காட்டியுள்ளது.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் பெருமளவான தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து தமிழகத்துக்கும், உலகில் உள்ள பல்வேறு நாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றனர்.

தமிழகத்துக்கு சென்ற இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டுமென பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்திருந்தாலும் கூட, இற்றை வரை எந்தவித தீர்மானத்துக்கும் உட்படுத்தப்படவில்லை என்பதனையே அறிய முடிகின்றது.

அண்மையில் அமுலாக்கப்பட்ட இந்திய குடியுரிமை திருத்தச் சட்டத்தில் கூட இலங்கையிலிருந்து சென்ற அகதிகளின் குடியுரிமை தொடர்பான அம்சம் உள்ளடக்கப்படாமை ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் பல நாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களில் பெரும்பாலானோர் இன்று நல்ல நிலையில் இருப்பதோடு அவர்கள் கௌரவமாகவும், சிறப்பாகவும் செயல்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையானது 1951 ஆம் ஆண்டின் அகதிகள் சாசனம், மற்றும் அதன் 1967 ஆம் ஆண்டு நெறிமுறை ஆகியவற்றில் இணையா விட்டாலும் , சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான சிகிச்சை அல்லது தண்டனைக்கு எதிரான சாசனம் மற்றும் சர்வதேசம் போன்ற சர்வதேச மரபுச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் ஒப்பந்தக் கடமைகளுக்கு இலங்கை கட்டுப்பட்டிருக்கின்றது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயத்தின் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, இலங்கையில் 567 அகதிகளும் 224 புகலிடக் கோரிக்கையாளர்களும் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

இதே வேளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயமானது (UNHCR) இந்த ஆண்டு இறுதிக்குள் கொழும்பில் உள்ள தனது அலுவலகங்களை மூடுவதாக அறிவித்துள்ளது. இதனால் இலங்கையிலுள்ள நூற்றுக்கணக்கான அகதிகளது எதிர்காலமானது ஒரு நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றது.

இலங்கையானது அகதிகள் உடன்படிக்கையில் கையெழுத்திடாத ஒரு நாடாகும் . அதே வேளை

அகதிகள் அல்லது புகலிடக் கோரிக்கையாளர்களைக் கையாள்வதற்கான உள்நாட்டுச் சட்டம் அல்லது பொறிமுறை எதுவும் இல்லையென்பதுவும்குறிப்பிடக்கூடியஅம்சமாகும்.

அகதிகளாக வெளியேறுபவர்களை ஏற்றுக் கொள்ளும் நாடுகள் கண்ணியத்துடனும், மனிதாபிமானத்துடனும், "மக்கள் யாவரும் சமமே" என்ற அடிப்படையில் அவர்களை வழி நடத்துவது அவசியம்.

ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் அரசாங்கங்கள் தத்தமது நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளையும் சமமாக நடாத்துவதன் மூலம் அகதிகள் என்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

"பிறப்பால் மனிதர்கள் யாவரும் சமமே " என்ற உன்னதக் கோட்பாட்டை பின்பற்றினால், இந்த உலகில் எல்லோரும் சரி சமமாக மதிக்கப்பட்டு, மகிழ்ச்சியாக, தாம் இருக்கும் இடங்களிலேயே வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள முடியும் என்பதே உண்மையாகும்.

பல்வேறு நாடுகளில் அகதிகளாக குடியேறும் மக்களின் செயற்பாடுகளை அவதானிக்கின்ற பொழுது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்று வரிகள் தான் ஞாபகத்திற்கு வருகின்றது

இந்தியா

கருப்புப் பெட்டியை

# அமெரிக்காவுக்கு அனுப்ப முடிவு



ஏர் இந்தியா விமான விபத்து குறித்து மேலும் விசாரணை நடத்துவதற்காக, இந்திய அதிகாரிகள் விபத்துக்குள்ளான போயிங் 787 விமானத்தின் சேதமடைந்த கருப்புப் பெட்டியை அமெரிக்க தேசிய பாதுகாப்பு போக்குவரத்து வாரியத்திற்கு (NTSB) அனுப்பவுள்ளனர்.

பெட்டிக்கு வெளிப்புறத்தில் ஏற்பட்ட சேதத்தால், டிஜிட்டல் ரெகார்டிங் தரவை மீட்டெடுப்பது சாத்தியமில்லை என இந்திய நிபுணர்கள் தெரிவித்ததால், அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரவுகளை பெற அமெரிக்கா அனுப்பவுள்ளது.

இந்தியா

ஈரானில் உள்ள இந்தியர்களுக்காக

# ‘ஆபரேஷன் சிந்து’ ஆரம்பம்



ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே போர் சூழல் அதிகரித்த நிலையில், ஈரானில் சிக்கியுள்ள இந்திய குடிமக்களை பாதுகாப்பாக வெளியேற்ற இந்திய அரசு “ஆபரேஷன் சிந்து”-ஐ தொடங்கியது.

தெஹ்ரான் மீதான இஸ்ரேலிய தாக்குதல்களைத் தொடர்ந்து, இந்திய குடிமக்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஜூன் 17ஆம் திகதியன்று வடக்கு ஈரானில் இருந்து ஆர்மீனியாவுக்கு வந்த 110 இந்திய மாணவர்கள் இந்தியாவுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.


அவர்கள் அனைவரும் ஆர்மீனியாவின் தலைநகரான யெரெவனில் இருந்து சிறப்பு விமானத்தில் இந்தியாவுக்கு புதன்கிழமை (18) இரவு புறப்பட்டனர். இந்த மாணவர்கள் குழு வியாழக்கிழமை (19) காலை புது டெல்லி விமான நிலையத்தை அடைவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக தெஹ்ரானை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் ஏற்கனவே அங்குள்ள இந்தியர்களை அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்கா

ஈரான் மீது தாக்குதல் நடத்த

# அமெரிக்கா திட்டம்?



ஈரானின் எச்சரிக்கையை தொடர்ந்து, மத்திய கிழக்குப் பகுதிகளில் அமெரிக்க இராணுவம் அதிகரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்புக்காக கூடுதல் போர் விமானங்கள், கப்பல்கள் வரவழைக்கப்பட்டுள்ளது.

இந்த வார இறுதியில் ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டு வருவதாகவும் ஆனால் இறுதி முடிவுகள் இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

சீனா

அரசு அதிகாரிகள்

# விருந்துகளில் பங்கேற்க தடை

சீனாவில், அரசு அதிகாரிகள் விருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் அரசு அதிகாரிகள் அதிகளவில் பணி நிமித்தமாகவும், அலுவலக ரீதியான தொடர்பை தாண்டிய நட்பை வளர்த்துக்கொள்ளவும் சக அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்களுடன் இரவு விருந்து நிகழ்ச்சிகளில் பங்குபெறுகிறார்கள்.

இதனால் ஊழல் குற்றச்சாட்டுகள் பெருகுவதாக புகார்கள் வந்தன. மேலும் விருந்து நிகழ்ச்சிகளுக்கு வரும் அரசு அதிகாரிகள் மர்மமான முறையில் இறந்துவிடுவது அங்கு தொடர்ந்து வருகிறது.

இந்தநிலையில் அரசு அதிகாரிகள் இரவு நேர விருந்து நிகழ்ச்சிகள் மற்றும் கேளிக்கைகளில் ஈடுபட அந்த நாட்டு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

குறிப்பாக அரசு அதிகாரிகள் 3 பேருக்கு மேல் ஒரு இடத்தில் கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் வருங்காலத்தில் அரசாங்கம் சார்பில் உளவு சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்க்கலாம் என ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

ஈரான்

ட்ரம்ப் பதிலால்

## கச்சா எண்ணெய் விலை சரிந்தது

ஈரான் போரில் அமெரிக்கா நேரடியாக தலையிடுமா என்பது குறித்து ட்ரம்ப் உறுதியான முடிவு ஏதும் சொல்லாததால், சர்வதேச கச்சா எண்ணெய் விலை சற்றே சரிந்துள்ளது.

பிரண்ட் கச்சா எண்ணெய் விலை 20 சென்ட் குறைந்து ஒரு பேரலுக்கு 76.5 டொலராக குறைந்துள்ளது.

ரஷ்யா

ஈரான் – இஸ்ரேல் மோதல்:

## ‘மத்தியஸ்தம் செய்ய தயார்’

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்துவைக்கத் தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புதின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆட்சியாளர் முகமது பின் ஸாயத் அல் நஹ்யானுடன் புதின் தொலைபேசி வாயிலாக பேசினார். அப்போது, ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் தற்போது நடைபெற்றுவரும் மோதல் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை இருவரும் ஒப்புக்கொண்டனர்.

இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்:

# இங்கிலாந்தை வீழ்த்துமா இந்தியா?



இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது லீட்ஸில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் தோல்வி, இரவிச்சந்திரன் அஷ்வின், றோஹித் ஷர்மா, விராட் கோலியின் ஓய்வுக்குப் பிறகு களமிறங்கும் இந்திய அணி எவ்வாறு இங்கிலாந்தைச் சமாளிக்கப் போகின்றது என்கிறது கேள்விக்குறியாகக் காணப்படுகிறது.

இந்திய அணியின் மூன்றாமிடத்தில் கருண் நாயர் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுவதோடு, ஏழாமிடத்தில் நிதிஷ் குமார் ரெட்டியும், ஜஸ்பிரிட் பும்ராவோடு மொஹமட் சிராஜ், பிரசீத் கிருஷ்ணாவோடு குல்தீப் யாதவ் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக ஜேக்கப் பெத்தெல்லின் மீள்வருகையின் பின்னரும் ஒலி போப் தக்க வைக்கப்பட்டாலும் அவரிடமிருந்து தொடர்ச்சியான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படும்.

இத்தொடரைப் பொறுத்த வரையில் ஜோ றூட், ஜஸ்பிரிட் பும்ராவிலேயே அவ்வணியின் வெற்றி வாய்ப்புகள் பெரும்பாலும் தங்கியுள்ளன.

இங்கிலாந்து: 1. ஸக் குறோலி, 2. பென் டக்கெட், 3. ஒலி போப், 4. ஜோ றூட், 5. ஹரி ப்றூக், 6. பென் ஸ்டோக்ஸ், 7. ஜேமி ஸ்மித் (விக்கெட் காப்பாளர்), 8. கிறிஸ் வோக்ஸ், 9. பிறைடன் கார்ஸ், 10. ஜொஷ் டொங்க், 11. ஷொய்ப் பஷிர்.

எதிர்பார்க்கப்படும் இந்திய அணி: 1. லோகேஷ் ராகுல், 2. யஷஸ்வி ஜைஸ்வால், 3. கருண் நாயர், 4. ஷுப்மன் கில், 5. றிஷப் பண்ட், 6. இரவீந்திர ஜடேஜா, 7. நிதிஷ் குமார் ரெட்டி, 8. ஜஸ்பிரிட் பும்ரா, 9. குல்தீப் யாதவ், 10. மொஹமட் சிராஜ், 11. பிரசீத் கிருஷ்ணா.



கழக உலகக் கிண்ணம்:

# மட்ரிட் – ஹிலால் போட்டி சமநிலையில் முடிந்தது

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவில் வியாழக்கிழமை (19) நடைபெற்ற சவுதி அரேபியக் கழகமான அல் ஹிலாலுடனான குழு எச் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் சமப்படுத்தியது.

றியல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கொன்ஸலோ கர்சியா பெற்றதோடு, அல் ஹிலால் சார்பாகப் பெறப்பட்ட கோலை ருபென் நெவிஸ் பெற்றிருந்தார்.

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# 495 ஓட்டங்களைப் பெற்ற பங்களாதேஷ்



இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 495 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றது. அசித பெர்ணாண்டோ 4, மிலான் ரத்னாயக்க 3, தரிந்து ரத்னாயக்க 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் செவ்வாய்க்கிழமை (17) ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளில் தேநீர் இடைவேளையின்போது தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை 2 விக்கெட்டுகளை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பதும் நிஸங்க 126 ஓட்டங்களுடனும், அஞ்சலோ மத்தியூஸ் 21 ஓட்டங்களுடனும் காணப்பட்டிருந்தனர். முன்னதாக தினேஷ் சந்திமால் 54, லஹிரு உதார 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் தஜியுல் இஸ்லாம், நயீம் இஸ்லாம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 20 ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.